1993 ஏப்ரல் 16]

(ஆ) செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் திறந்து விடுவதால் விவசாயம் பாதிக்கப் படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. போளூர் வரதன் : செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து சென்னைக்கு தண்ணீர் திறந்து விடுவதால் அந்தப் பகுதி விவசாயம் பாதிக்கப்படுவது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று ஒரு செய்தியை எனக்குக் கொடுத்திருக்கிறார். அந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். போளூர் வரதன் (குறுக்கீடுகள்). போளூர் வரதன் (குறுக்கீடுகள்) போளூர் வரதன் (குறுக்கீடுகள்) போளூர் வரதன் இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். (குறுக்கீடுகள்). போளூர் வரதன் (குறுக்கீடுகள்) போளூர் வரதன் (குறுக்கீடுகள்) போளூர் வரதன் (குறுக்கீடுகள்) போளூர் வரதன் இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். (குறுக்கீடுகள்) போளூர் வரதன். (குறுக்கீடுகள்) மற்றவர்களுக்கு அனுமதி இல்லை. அனுமதி இல்லை என்று சொன்னதற்குப் பிறகு உட்கார வேண்டும். அனுமதி இல்லை (குறுக்கீடுகள்).

4. கவன ஈர்ப்பு.

(அ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் வேடசந்தூர் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு, திரு. ச. காந்திராஜன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் வேடசந்தூர் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டியது குறித்து " மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1993 ஏப்ரல் 16

அறிக்கை.

எந்த ஒரு பகுதியையோ அல்லது வட்டத்தையோ, "வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி" என்று அறிவிப்பு எதுவும் செய்யாமலேயே, பாதிக்கப்பட்ட பகுதிகளில் வறட்சி நிவாரணப்பணிகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டை நீக்கவும், இதர இடர்பாடுகள் ஏற்படின் நிவாரணம் வழங்கவும், இடர்பாடு நிவாரண நிதியிலிருந்து 1992-93 ஆம் ஆண்டில் இதுவரை மாநிலம் முழுமைக்கும் வறட்சி நிவாரணத்திற்காக 14.02 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளன. ஜவஹர் வேலை வாய்ப்பு பணிகளுக்காக ரூ. 5 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட தொகை, குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும், லாரி மூலம் குடிநீர் வழங்கவும், ஆழ்துளைக் கிணறுகளை சுத்தம் செய்தல், திறந்தவெளிக்கிணறுகளை ஆழப்படுத்துதல், திறந்த வெளிக் கிணறுகளை அமைத்தல், குழாய்களை நீட்டித்தல் மற்றும் ஏனைய பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்திற்கு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூ. 99.58 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு அளிப்பதற்காக ரூ. 39.87 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களை ஆய்வு செய்து அதற்கேற்றவாறு நிவாரணம் அளிக்க அரசால் நடவடிக்கை உடனுக்குடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. சந்திராஜன்.

திரு. ச. சந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் அண்ணா மாவட்டம் முழுமைக்கும் பல்வேறு நிவாரணப் பணிகளுக்காக மொத்தம் 99.58 லட்சம் ரூபாய் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் மாற்று வேலைத் திட்டங்களுக்காக 39.87 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தன்னுடைய அறிக்கையிலே தெரிவித்திருக்கின்றார்கள். மாவட்டத்திலேயே அதிக வறட்சி மிக்க பகுதியாக என்னுடைய வேடசந்தூர் பகுதி இருக்கின்ற காரணத்தினாலே என்னுடைய வேடசந்தூர் தொகுதிக்கு மட்டும் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது? எந்த இனங்களில் அந்தத் தொகை செலவழிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

1993 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு வறட்சி வருவதை எண்ணிப் பார்த்து வறட்சியினால் தண்ணீர், குடி தண்ணீர் பஞ்சம் இருக்கக் கூடாது என்று எண்ணி தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் முன்கூட்டியே அதற்கு வேண்டிய பணம் ஒதுக்கியதனால் குடிதண்ணீர் பஞ்சம் இல்லாமல் சென்ற ஆண்டு சமாளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல இந்த ஆண்டும்.. (குறுக்கீடுகள்)

3. சிறப்பு கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி போலீஸ் நிலையம் அருகில இலங்கைப் போராளி தப்பிக்க முயன்றபோது சுடப்பட்டது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது ஒரு முக்கியமான பிரச்சினையை, வேடசந்தூர் தொகுதியினுடைய வறட்சி பற்றிய அறிவிப்பைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அவரைப் பேச விடாமல், அரசாங்கம் அந்த வறட்சி நிவாரணப் பணிக்கு எடுக்கிற முடிவுகளுக்குத் தடையாக இருப்பது முறையல்ல. (குறுக்கீடுகள்).

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

முற்பகல் 11-35

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையைப் பொறுத்த வரையிலும் நீண்ட நெடுங்காலமாகவே ஜீரோ ஹவர் என்று ஒன்று இல்லவே இல்லை. இந்த ஜீரோ ஹவரை எந்த ஒரு பேரவைத் தலைவரும் அனுமதித்ததும் இல்லை. எங்கேயும் சட்ட விதிகளில் ஜீரோ ஹவர் என்று ஒன்று இல்லை. தாங்களாக விளக்கங்கள் கேட்க வேண்டுமென்று சில சமயங்களில் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கேட்கிற போது, அவர்களுக்குத் தாங்கள் உரிமை தந்து, பிரச்சினைகளை எழுப்பலாம் என்றும், அதற்கான விடையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ அல்லது உரிய அமைச்சரோ எடுத்துத் தெரிவிப்பதன் மூலம் நாட்டு மக்களுக்குத் தெளிவும், திடமும் ஏற்படும் என்று கருதி, தாங்கள் பெருந்தன்மையோடு அவர்களை சில பிரச்சினைகளை எழுப்ப அனுமதிக்கிறீர்கள்.

[1993 ஏப்ரல் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு நான் அனுமதித்ததுகூட, 2 பிரச்சினைகளும் எதிர்க் கட்சியினர் கொடுத்ததே. அதிலும் முக்கியமான பிரச்சினை, திரு. போளூர் வரதன் அந்தப் பகுதிக்குத் தண்ணீர்விட வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதெல்லாம் விதி 55-லேதான் அனுமதிக்கப்படும். அதை ஸ்பெஷல் மென்ஷனாக பேசுங்கள், பேசுங்கள் என்று நான் சொன்னபோது, அந்த உறுப்பினர் பேச எழுந்தபோது, பக்கத்தில் இருந்தவர்கள் அவரைப் பிடித்து, அழுத்தி உட்கார வைத்தார்கள். மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஒரு பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தண்டாயுதபாணி அவர்கள் கேட்டபோது, அதற்குத் தாங்கள் பெருந்தன்மையோடு அனுமதி அளித்தீர்கள். அதற்குப் பதிலையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக இருக்கின்ற நிலைமையை எடுத்துத் தெரிவித்தார்கள். ஆகவே கமுதியிலே ஒருவர் சுடப்பட்டார். அவர் விடுதலைப் புலியா, அல்லவா என்ற பிரச்சினையை அவர் எழுப்புகிறபோது, அதற்கு திட்பமாக, திட்டவட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பதிலை எடுத்துத் தெரிவித்து, அதற்கான விளக்கத்தை இந்த நாடு பெற வேண்டுமென்பதற்காக தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை விட்டு மேலும் மேலும் பேசுவார்களானால், அதற்குப் பதில் இல்லாமல் நின்று விடுமானால், இந்த நாட்டிலே குழப்பம் ஏற்படுமென்ற காரணத்தால்தான், அந்தப் பிரச்சினையை முறைப்படி அவர்கள் எழுப்பினால் அதற்கும் பதில் சொல்ல நான் தயாராக இருக்கிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெளிவாகக் குறிப்பிட்டார்கள். இதற்குப் பிறகும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து இங்கே அனுமதிக்க வேண்டும், அனுமதிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள் என்றால், ஏற்கெனவே அவர்கள் திட்டம் போட்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை. இங்கே ஏதேனும் குழப்பம் நடத்த வேண்டும். இடைஞ்சல் செய்ய வேண்டும். குறுக்கீடு செய்ய வேண்டும் என்ற நோக்கம்தான் அதில் இருக்கிறதே தவிர சட்ட மன்றத்தில் விளக்கம் பெற வேண்டுமென்றோ, அதன் மூலம் நாடு நலம் பெற வேண்டுமென்றொ எண்ணி, இந்தப் பிரச்சி சின்னயை எழுப்புகிறார்களா என்று தெரியவில்லை. ஆனாலும் கூட, இப்படிப்பட்ட முறைகள் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் சட்டமன்றத்தினுடைய விதி முறைகளுக்கு முற்றிலும் உகந்தது அல்ல என்பதை இவர்கள் உணராவிட்டாலும், நாட்டு மக்கள் தெளிவாக உணர்வார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் திட்பமாக, தெளிவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ''தில் சொன்னதற்குப் பிறகும்,

1993 ஏப்ரல் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இங்கே கூச்சல் போட்டுக் கொண்டு, இந்த அவையினுடைய நேரத்தை விணடித்துக்கொண்டிருந்தது மிக மிகக் கண்டிக்கத் தக்கது என்பதை மட்டும் அவைக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினையில் எதிர்கட்சித் தலைவர் தன்னைப் பேசவே அனுமதிப்பதில்லை, அனுமதிப்பதில்லை என்பதைத் திரும்பத் திரும்ப பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லி இருக்கிறார். அவரைப் பேச நான் அனுமதித்து, அந்தப்பிரச்சினையைப்பற்றி எழுப்புவதற்கு அவரை அனுமதித்து, அவரும் ஒரு கருத்தைச் சொன்னார். அந்தக் கருத்தைச் சொன்னதற்குப் பிறகு, அதற்கு நானும் பதிலைச் சொன்னேன். அப்படிப் பதில் சொன்னதற்குப் பிறகுதான் இதந்தப் பிரச்சினையே எழுந்ததே தவிர, அவரைப் பேசவே அனுமதிக்கவில்லை என்பது சரியல்ல.

முற்பகல் 11-40

4. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(அ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், வேடசந்தூர் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டிய அவசியம் குறித்து—தொடர்ச்சி.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையில் அண்ணா மாவட்டம் முழுமைக்கும் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூ. 99.58 லட்சமும் மற்ற வேலைத் திட்டங்களுக்காக ரூ. 39.87 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே வறட்சியின் கோரப்பிடியில் சிக்கியிருக்கிற வேடசந்தூர் தொகுதிக்கு இதில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது? அது எந்த இனங்களில் செலவழிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வறட்சி ஏற்படுகிறபோது வறட்சி வந்தபிறகு அதற்குப் பிறகு நடவடிக்கை எடுத்தால் குடி தண்ணீர் பஞ்சம் வந்துவிடும் என்பதற்காக முன்கூட்டியே பணம் ஒதுக்கியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு முன்னாலே பணம் ஒதுக்கியும் எங்கெங்கே வறட்சி வரும், எங்கெங்கே குடிதண்ணீர் பஞ்சம் வரும் என்று சொல்லி, நடவடிக்கை எடுத்த

தால் குடிதண்ணிர் பஞ்சம் வராதபடி சென்ற ஆண்டு பல இடங்களில் காப்பாற்றப்பட்டது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிக் குடிதண்ணீர் பஞ்சம் வருகிற இடத்தைப் பார்க்கிறபோது புதிதாக ஆழ் குழாய்க் கிணறுகள் போடுவது, இருக்கின்ற ஆழ்குழாய்க் கிணறுகளைச் சுத்தம் செய்வது, திறந்தவெளி கிணறுகள் வெட்டுவது, இருக்கிற கிணறுகளை ஆழப்படுத்துவது, தண்ணீர் கிடைப்பதில் மிகக் கஷ்டமாக இருக்கும்போது லாரி மூலம் தண்ணீர் கொண்டு போவது, இப்படிப்பட்ட பல்வேறு வழிகளில் குடிதண்ணீர் பஞ்சத்தைப் போக்கடிப்பதற்கு இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. காந்திராஜன்.

திரு. ச. காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் சொல்லியதைப்போல, வறட்சியை முன்கூட்டியே தவிர்ப்பதற்காக நமது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு இதுவரையிலேயும் ஓரளவுக்கு அதிக அளவிலே ஆழ் குழாய்க் கிணறுகளைப் போட்டிருக்கிறது. இருந்தாலும் வறட்சியின் எல்லை என்பது, அண்ணா மாவட்டம் வேடசந்தூர் தொகுதியைப் பற்றியிருக்கின்ற காரணத்தாலே, ஏறத்தாழ 10 சதவித மக்கள் தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்காக காவிரி கரையோர ஊர்களுக்கும் கேரளாவில் இருக்கிற கொச்சின், எர்ணாகுளம் போன்ற ஊர்களுக்கும் குடியேறியிருக்கிறார்கள். எனவே அந்த மக்கள் இங்கே திரும்பி வந்து இனிமேல் விவசாயம் செய்யமுடியாத நிலையில் மோசமான வறட்சி ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால்-ஏற்கெனவே கூட நில வருவாய்த்துறை நிர்வாக ஆணையாளர் கூட வேடசந்தூர் தொகுதியைப் பார்வையிட்டு வறட்சி அதிகமாக இருக்கிறது என்று சொல்லி உடனடியாக நிவாரணம் அளிக்கப்படும் என்று பொது மக்களிடத்திலேயும் சொல்லி வந்திருக்கிறார்கள் என்ற காரணத்தால்—அந்தப் பகுதியை வறட்சி என்று அறிவித்தால்தான் எங்களுக்கு வழங்கப்படுகின்ற வரி தள்ளுபடி, கடன் வசூல் நிலுவை போன்ற சலுகைகள் கிடைக்கும். ஆகவே வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும், இந்த ஒப்பற்ற ஆட்சியின் பொறுப்பை ஏற்றியிருக்கின்ற புரட்சித்தலைவியின் அரசும் இதற்காக ஆவன செய்வார்களா? எங்களுக்கு வேண்டிய அனைத்து சலுகைகளையும் உடனடியாக அறிவித்து உதவி செய்வார்களா? இன்னும் அதிக அளவிலே வேடசந்தூர் தொகுதிக்கு வேண்டிய எல்லாவித சலுகைகளையும் தரவேண்டுமென்று கேட்டு அந்தச் சலுகைகளையும் அளிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி ஏற்படுவதால் விவசாயத் தொழிலாளர்களுக்கு எல்லாம் வேலையில்லாமல் போய்விடுகிற நிலைமை ஏற்படுவதைப் போக்கடிப்பதற்காக ரூ. 39.87 லட்சம் வேலைவாய்ப்பிற்காக ஒதுக்கியிருக்கிறது. வறட்சி ஏற்பட்டு அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டால் பாதிக்கப்பட்ட இடங்களுக்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறிக்கையைப் பெற்று வரி வசூல் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால் அந்த ஏற்பாட்டையும் செய்வோம் என்பதையும் தெரிவிக்கிற அதேநேரத்தில் சராசரியாக ஆண்டுதோறும் அந்தப் பகுதியில் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திற்குப் பெய்யவேண்டிய மழை அளவு 739.1 மி.மீ. தான் என்றாலும், சென்ற ஆண்டு பெய்தது 772.8 மி.மீ. ஆகும். அதிகமாக மழை பெய்திருக்கிறது. இருந்தாலும் வறட்சி எங்கெங்கே ஏற்படுகிறதோ அதை மனதில் கொண்டு அந்த இடங்களில் அறிக்கை பெற்று தேவையானால் வரி வசூல் தள்ளுபடியும் செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) பத்தாவது வகுப்பு முடித்து ஆசிரியர் பயிற்சி முடிப்பவர்க்கும் 12ஆம் வகுப்புத் தேறியபின் ஆசிரியர் பயிற்சி பெறுபவர்க்கும் இடையேயுள்ள வேறுபாட்டால் ஆசிரியர் பயிற்சி மாணவரிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்து ஆசிரியை பயிற்சி பெறுபவர்களிடையே இரண்டாண்டு வேறுபாடு உள்ளது குறித்து" மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.